விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 21 வெள்ளி 06.08.2021 மலர் - 2, இதழ் - 122

# மிரட்டும் முன்னாள் திமுக கவுன்சிலர்


விஜயபாரதம்

தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் அருகே மாநகராட்சிக்குச் சொந்தமான 4 ஏக்கர் இடம் உள்ளது. இதனை மாத வாடகை ரூ 480 வீதம் 99 வருடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு எடுத்த சிலர், அங்கு டாஸ்மாக் கடை, கிளப், லாட்ஜ் போன்றவற்றை நடத்தி வருகின்றனர். தஞ்சாவூர் கூடுதல் கலெக்டர், மாநகராட்சி ஆணையர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் கொரோனா கட்டுப்பாட்டு வார்டு அமைக்க அந்த இடங்களை ஆய்வு செய்தனர்.

அப்போது அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் உள்ளிட்ட அறிஞர்கள் நாடகம் நடத்திய புகழ்பெற்ற ராமநாதன் சபாவில் நடத்தப்பட்டு வந்த அனுமதியில்லாத தனியார் டாஸ்மாக் கடையும் ஆய்வு செய்யப்பட்டு சீல் வைக்கப்பட்டது. அப்போது அங்கு வந்த ஆர்.கே குரூப்ஸ் என அழைக்கப்படும் சகோதரர்களில் ஒருவரான ஆர்.கே. நாகராஜ், "என்ன சார், சீல் வச்சீங்கண்ணா எங்களால உடைக்க முடியாதா" எனக் கூடுதல் ஆட்சியரை மிரட்டினார். மேலும், டேய், அந்த சீல உடைங்கடா" என தன் அடியாட்களுக்கு உத்தரவிட்டார். பின்னர், "சார் முதல்ல இது என்ன ஊர்னு தெரிஞ்சுக்கங்க, உங்களைபோல பல அதிகாரிகளை நாங்கள் பார்த்துவிட்டோம்" எனவும் மிரட்டினார். நாகராஜ் தி.மு.கவில் முன்னாள் கவுன்சிலராகவும் தற்போது வார்டு செயலாளராகவும் உள்ளார். இதனையடுத்து நாகராஜ் மீது, அரசு அதிகாரிகளைப் பணி செய்யவிடாமல் தடுத்தல், தகாத வார்த்தைகளில் பேசி கொலை மிரட்டல் விடுத்தல் உள்ளிட்ட பிரிவுகளில் கிழக்கு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து விசாரணை நடைபெற்று வருகிறது. தி.மு.க ஆட்சி அதிகாரத்திற்கு வந்த நாள் முதலே, அக்கட்சியினர் இதுபோல நடந்துகொள்வது வழக்கமாகிவிட்டது. 'இவர்களுக்கு ஏன் ஓட்டு போட்டோம்' என இப்போதே பொதுமக்கள் புலம்ப ஆரம்பித்துவிட்டனர்.

# மாணவிக்கு உதவி


விஜயபாரதம்

சென்னை சேத்துப்பட்டில் வசிக்கும் பட்டியலின சமூகத்தை சேர்ந்த குமாரி மாளவிகா 4ம் ஆண்டு கணினி பொறியியல் படித்து வருகிறார். அவர் படிப்பதற்கு உதவியாக மடிக்கணினி சேவாபாரதி தமிழ் நாடு சார்பாக வழங்கப்பட்டது. இந்த கணினியை ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் வடதமிழக மாநில ஊடகத்துறை செயலாளர் நரசிம்மன் கொடுத்தார். உடன் ஆர்.எஸ்.எஸ், சேவாபாரதி பொறுப்பாளர்கள் இதில் கலந்து கொண்டனர். இதனை நன்கொடையாக வழங்கியவர்களுக்கு நிகழ்ச்சியில் நன்றிகள் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

# ரவிக்குமார் தாஹியா வெள்ளிப்பதக்கம்


விஜயபாரதம்

டோக்கியோ ஒலிம்பிக் ஆடவர் 57 கிலோ மல்யுத்த இறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் ரவிக்குமார் தாஹியா ரஷ்யாவின் உகுயேவை எதிர்த்து விளையாடினார். இதில் 74 என்ற கணக்கில் ரஷ்ய வீரர் வென்றார். இதனால் ரவிக்குமார் தாஹியா வெள்ளிப்பதக்கம் வென்றார். இதையடுத்து, சுஷில் குமாருக்கு பிறகு மல்யுத்த விளையாடில் இரண்டாவது வெள்ளிப் பதக்கம் வென்ற பாரத வீரர் என்ற பெருமையையும் ரவிக்குமார் பெற்றுள்ளார்.

# நீட் தேர்வு அவகாசம் நீட்டிப்பு



விஜயபாரதம்

மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்காக நடத்தப்படும் நீட் நுழைவுத் தேர்வுக்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 'neet.nta.nic.in என்ற இணையதளத்தில், ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்கலாம். தேர்வுக்கான கட்டணத்தை, ஆகஸ்ட்டு 10ம் தேதி இரவு 11:50 மணிவரை செலுத்தலாம். வரும் 11ம் தேதி முதல், 14ம் தேதி மதியம் 2 மணிவரை, ஆன்லைன் விண்ணப்பத்தில் திருத்தம் செய்யலாம்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்து முன்னணி போராட்டம்


விஜயபாரதம்

திருச்செங்கோட்டில் கிறிஸ்தவர்களோடு கைகோர்த்துக் கொண்டு விநாயகர் கோயிலை அகற்றியதுடன் அந்த கோயிலுக் காக போராடியவர்கள் மீது தாக்குதல் நடத்தி கைது செய்த நாமக்கல் மாவட்ட நிர்வாகத்தை கண்டித்தும், மீண்டும் அதே இடத்தில் விநாயகர் திருமேனியை பிரதிஷ்டையை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தியும், இந்து முன்னணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் திருச்செங்கோடு அண்ணா சிலை அருகில் நடைபெற்றது.

# கோயிலுக்குள் செருப்பணிந்த மருத்துவர்


விஜயபாரதம்

வேலூர் மாவட்டம் பொய்கை பகுதி முத்தாலம்மன் கோயிலில் சமீபத்தில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி முகாமில் ரெஜினா என்ற பெண் மருத்துவர், கோயிலின் கருவறை அருகே செருப்பு அணிந்துகொண்டு அமர்ந்திருந்தார். இதைக் கண்ட அப்பகுதி மக்கள், ரெஜினாவிடம் ஏன் கோயிலுக்குள் செருப்பணிந்து வந்தீர்கள் என கேட்டபோது, கோயிலுக்குள் செருப்பு போட்டுக்கொண்டு வரவேண்டாம் என போர்டு வைத்து உள்ளார்களா? என திமிராக பேசியுள்ளார். மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து அவர் வெளியேறினார். இவர்மீது துறை ரீதியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.

# கோயில் நிலத்தில் கல்லூரி




விஜயபாரதம்

'பூந்தமல்லி நெடுஞ்சாலையில் நேரு மெட்ரோ ரயில் நிலையம் அருகில், சீனிவாச பெருமாள் கோயிலுக்கு சொந்தமாக 50 ஆயிரம் சதுர அடி இடம் இருக்கிறது. அந்த இடத்தில், வணிக வளாகம், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சென்னையில் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களுக்கு வரும் ஹிந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் தங்குவதற்கான விடுதிகள் கட்ட பணிகள் மேற்கொள்ளப்படும். ஆக்கிரமிப்புகளை ஒரு வாரத்தில் அகற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல பூந்தமல்லி நெடுஞ்சாலையில் காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான 50 கிரவுண்டு நிலத்தில் தனியாரால் நடத்தப்பட்டு வந்த பள்ளி, கோயில் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது ஹிந்து சமய அறநிலையத் துறையே இப்பள்ளியை நடத்த முன்வந்துள்ளது. அந்த கோயிலுக்கு சொந்தமான இடத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மாணவ, மாணவிகளின் வசதிக்காக, புதிய நவீன கல்லூரி கட்டும் பணிகள் விரைவில் தொடங்கப்படும்' என அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார். கோயில் நிலத்தில் இதுபோல கட்டப்படும் பள்ளி, கல்லூரி, வணிக வளாகங்கள் ஹிந்து அற நிலையத்துறையால் நிர்வகிக்கப்படுமா அல்லது லயோலா கல்லூரி போல தங்களுக்கு வேண்டியவர்களுக்கும் மாற்று மதத்தவர்களுக்கும் தாரை வார்க்கப்படுமா என்பதையும் அமைச்சர் தெளிவுபடுத்தினால் நல்லது என ஹிந்து பக்தர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

---

# கேட் தேர்வு

விஜயபாரதம்

மத்தியக் கல்வி நிறுவனங்களில் பொறியியல் மேற்படிப்புகளுக்காக நடத்தப்படும் நுழைவுத் தேர்வான கேட் 2022 தேர்வுகள் அடுத்த ஆண்டு பிப்ரவரி 5, 6, 12, 13 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இத்தேர்வு சிவில், மெக்கானிக்கல், கம்ப்யூட்டர் சயின்ஸ் உட்பட 27 பாடப் பிரிவுகளில் நடத்தப்படும். தற்போது புதிதாக கடற்படை கட்டிடக்கலை, கடல்சார் பொறியியல் என 2 தாள்கள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. இந்தத் தேர்வுக்கு மாணவர்கள் ஆகஸ்ட் 30 முதல் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க கடைசித் தேதி செப்டம்பர் 24. தாமதக் கட்டணத்துடன் சேர்த்து அக்டோபர் 1 வரை விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்களில் திருத்தம் செய்ய நவம்பர் 1 கடைசித் தேதி. தாள்கள் மாற்றம், தேர்வு மையம் மாற்றம் ஆகியவற்றைக் கூடுதல் கட்டணத்தோடு மேற்கொள்ள நவம்பர் 12 கடைசித் தேதி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜயபாரதம்

## பனியமாதா விழா உள்ளூர் விடுமுறை !?

தூத்துக்குடி பனிமய மாதா ஆலய திருவிழாவை முன்னிட்டு நேற்று தூத்துக்குடி மாவட்டம் முழுவதுக்கும் உள்ளூர் விடுமுறை விடப்படும் என மாவட்ட ஆட்சியர் அறிவித்துள்ளார். சப்பர பவனிகள் ஏதும் நடத்தப்படாது, ஆராதனை நிகழ்ச்சிகள் அனைத்தும் மக்கள் பங்கேற்பின்றி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களே பங்கேர்க முடியாத திருவிழா என்றால் எதற்கு உள்ளூர் விடுமுறை? இதே தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசை முத்தாரம்மன் ஆடிக் கொடை விழாவுக்குத் தடை, திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு பூட்டு, கந்த சஷ்டி விழாவுக்கு உள்ளூர் விடுமுறை ரத்து என ஆளும் கட்சிகளுக்கு கைப்பாவையாக செயல்படும் மாவட்ட நிர்வாகம், கிறிஸ்தவர்கள் விழாவுக்கு மட்டும் தாராளம் காட்டுவது ஏன்? என ஹிந்துக்களும் ஹிந்து அமைப்புகளும் கேட்டுள்ளனர்.

---

## கோவாக்சின் ஜி.எம்.பி. சான்றிதழ்




விஜயபாரதம்

பாரதத்தில் முற்றிலும் உள்நாட்டிலேயே உருவான உலகத்தரம் வாய்ந்த கொரோனா தடுப்பூசியான பாரத் பயோடெக்கின் 'கோவாக்சின்' பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. ஐ.நா பாதுகாப்புப்படை வீரர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில், பாரத் பயோடெக் நிறுவனம் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'கோவாக்சின் தடுப்பூசியின் மற்றொரு மைல்கல்லாக ஹங்கேரி நாட்டிடமிருந்து ஜி.எம்.பி எனப்படும் நல் உற்பத்தி சான்றிதழை கோவாக்சின் பெற்றுள்ளது. இது EUDRAGDMP என்ற ஐரோப்பிய சமூகத்திடமிருந்து பெற்ற சிறந்த உற்பத்திக்கான நற்சான்றிதழ்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---



## உலகில் உயரிய சாலை

கிழக்கு லடாக்கின் உம்லிங்லா பாஸ் பகுதியில் 19,300 அடி உயரத்தில், பாரதம் சாலை அமைத்துள்ளது. 52 கி.மீ., நீளம் கொண்ட இந்த தார் சாலை, அனைத்து வானிலைக்கும் பொருந்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் உலகிலேயே மிக உயரமான சாலையை கொண்ட தேசம் என்ற பெருமையை நமது பாரதம் பெற்றுள்ளது. பொலிவியாவில் 18,953 அடி உயரத்தில் உதுருஞ்சு எரிமலைக்கு செல்லும் சாலையே இதுவரை உலகின் உயரமான சாலை என்ற பெருமையை கொண்டிருந்தது. அது தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது. இந்த சாலை லடாக்கின் பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்காற்றும் என்பதால் இது அங்குள்ள மக்களுக்கு ஒருவரப்பிரசாதம். சுற்றுலா, சமூக பொருளாதாரம் உயரும் என மத்திய அரசு தெரிவித்திருக்கிறது. சீனா எல்லையில் பிரச்சனை செய்து வரும் நிலையில், படைகளையும் ராணுவத் தளவாடங்களையும் விரைவாக நகர்த்த இந்த சாலை பயன்படும் என்பதால், இது ராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் கருதப்படுகிறது.

# குழந்தைகளுக்கு கொரோனா பயமில்லை



விஜயபாரதம்

கொரோனா தாக்கம் குறித்து இங்கிலாந்தில் ‘ஸோ கோவிட் ஸ்டடி ஸ்மார்ட் போன் செயலி’மூலம், 5 முதல் 17 வயதுள்ள சிறுவர், சிறுமிகள் 25 ஆயிரம் பேரிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள் அடிப்படையில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகளை ‘தி லான்செட் சைல்டு அண்ட் அடலசன்ட்’ பத்திரிகை வெளியிட்டது. அதன்படி, 'நீண்ட கால கொரோனா அறிகுறிகளை அனுபவிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை மிகக்குறைவு. ஒரு சில குழந்தைகள் மட்டுமே, நீண்ட கால பாதிப்புகளை அனுபவிக்கின்றன. சில பெரியவர்கள் நீடித்த நோய் பாதிப்பை அனுபவிக்கின்றனர். அவர்களுக்கு 4 வாரங்களோ அதற்கும் கூடுதலாகவே அறிகுறிகள் தொடரும். கொரோனா பரிசோதனையில் ‘நெகட்டிவ்’ முடிவு வந்தபின்னரும் குழந்தைகள் சளி, காய்ச்சலால் அவதிப்படலாம். எனினும் குழந்தைகள் சராசரியாக 6 நாளில் கொரோனாவில் இருந்து குணம் அடைகின்றனர்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிதின் கட்கரி வேண்டுகோள்

கார்களில் பயணிப்போர் பாதுகாப்பைப் பொருத்தவரை ஏர்பேக்ஸ் எனப்படும் காற்றுப்பைகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. 2014க்கு முன்பு விற்பனையான சில கார்களில் ஆரம்பவிலை மாடல்களில் சுத்தமாகக் காற்றுப் பைகளே கிடையாது. விலை அதிகமான மாடல்களில் ஓட்டுனருக்கு மட்டுமே கற்றுப் பைகள் வைக்கப்பட்டன். அதன் பிறகு கார்களில் டிரைவருக்கு மட்டுமாவது காற்றுப்பை இருக்க வேண்டும் என்கிற சட்டம் வந்தது. எனினும் விபத்துப் பலிகள் அதிகமாகவே, ஏப்ரல் 2021ல் இருந்து விற்பனையாகும் அனைத்து கார்களுக்கும் டிரைவருக்குப் பக்கத்துப் பயணிக்கும் காற்றுப் பை வேண்டும் என்கிற சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்நிலையில், டெல்லியில் இந்திய ஆட்டோமொபைல் தயாரிப்பாளர்கள் கூட்டமைப்பு (SIAM) சந்திப்பில் பேசிய மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, இனிமேல் 6 காற்றுப்பைகள் கொண்ட கார்களைத் தயாரித்தால், விபத்துகளைக் கணிசமாகக் குறைக்கலாம் என வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். மேலும்,எலெக்ட்ரிக் கார்கள் தவிர்த்து, 100 சதவீதம் எத்தனால் போன்ற எரிபொருட்களில் இயங்கும் ( FFVs) கார்களையும் பாரதத்தில் தயாரிக்கவும் கேட்டுக்கொண்டார்.

விஜயபாரதம்




விஜயபாரதம்

# கடித்தாலும் விடமாட்டேன்

பாரதத்தை சேர்ந்த மல்யுத்தத்தில் ரவிகுமார் தாஹியா, கஜகஸ்தான் வீரர் நூரிஸ்லாம் சனயேவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறி வெள்ளிப் பதக்கத்தை உறுதி செய்தது ரசிகர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே, இந்த போட்டியின்போது கஜகஸ்தான் வீரர் விளையாட்டு விதிகளை மீறி, ரவிக்குமாரின் கையை கொடூரமாக கடித்துள்ளார்.அந்த வலியையும் பொருட்படுத்தாமல், விடாப்பிடியாக போராடி புள்ளிகளை குவித்து இறுதிக்கு முன்னேறியுள்ளார் ரவிக்குமார். இது போன்ற விதிமீறல்களை ஒலிம்பிக் கமிட்டியினர் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வலியுறுத்துகின்றனர்.

# நிலநடுக்க முன்னெச்சரிக்கை செயலி



விஜயபாரதம்

நாட்டிலேயே முதல் முறையாக நிலநடுக்கத்தை முன்கூட்டியே எச்சரிக்கும் அலைபேசி செயலி உத்தரகாண்டில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஐ.ஐ.டி ரூர்கேலா நிலநடுக்கத்தை முன்கூட்டியே எச்சரிக்கும் வகையிலான இந்த செயலியை உருவாக்கி உள்ளது. ‘உத்தர்காண்ட் பூகம்ப் அலர்ட்’ என பெயரிடப்பட்டுள்ள இதனை முதல்வர் புஷ்கர் சிங் தாமி அறிமுகம் செய்து வைத்தார். 'உயிர்காக்கும் இந்த செயலி குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார். இதன் மூலம், மக்கள் தங்களை பாதுகாத்து கொள்வதற்கும், பாதுகாப்பாக இடங்களுக்கு செல்லவும் முடியும். இடிபாடுகளில் சிக்கிக்கொண்டவர்களை மீட்கவும் இந்த செயலி உதவும். ஆன்ட்ராய்டு, ஐ.ஓ.எஸ் எனப்படும் 2 தளங்களிலும் இயங்கும்.

# ஸ்மிருதி இரானி தகவல்


விஜயபாரதம்

மத்திய அமைச்சர் ஸ்மிருதி இரானி தனது டுவிட்டர் பதிவில், '26 மாநிலங்களில் 660 சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் மூலம் இதுவரை 51,600 பாலியல், போக்ஸோ குற்ற வழக்குகளுக்கு விரைவாக தீர்வு காணப்பட்டுள்ளது. இந்த விரைவு நீதிமன்றங்கள் மேலும் 2 ஆண்டுகளுக்கு தொடர்ந்து செயல்பட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த முடிவு, அதிக எண்ணிக்கையில் சிறப்பு விரைவு நீதிமன்றங்களை அமைக்க வாய்ப்பளிக்கும். அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைந்து நீதி கிடைக்கும்' என தெரிவித்துள்ளார்.

# ரயில் சோதனை ஓட்டம்



விஜயபாரதம்

மதுரை போடி இடையே 90.4 கி.மீ. துூர மீட்டர் கேஜ் பாதையை அகற்றி அகல ரயில்பாதை அமைக்கும் பணிகள் ரூ. 450 கோடியில், 10 ஆண்டுகளுக்கு முன் தொடங்கியது. பல்வேறு காரணங்களால் முடங்கிய இப்பணி, மீண்டும் துரிதப்படுத்தப்பட்டது. முதலில் மதுரை உசிலம்பட்டி இடையே பணி முடிந்தது. பின்னர் உசிலம்பட்டி ஆண்டிபட்டி' இடையே பணி முடிந்து கடந்த டிசம்பரில் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. அதன்பின் எஞ்சிய ஆண்டிபட்டி தேனி இடையிலான 17 கி.மீ. துூர அகல ரயில்பாதை, கேட்டு, சிக்னல் அமைக்கும் பணிகள் நடைபெற்றன. அது முடிவடைந்த நிலையில் ரயில் இன்ஜினை 80 கி.மீ. வேகத்தில் வெற்றிகரமாக இயக்கி அதிகாரிகள் ஆய்வு செய்தனர். ரயில்வே பாதுகாப்பு முதன்மை ஆணையர் அபய்குமார் வரும் ஆகஸ்ட் 15க்குள் அதிகாரப்பூர்வ சோதனை ஓட்டம் நடத்தி ஆய்வு செய்ய உள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளுக்கு பின்னர் அகல ரயில் பாதையில் ரயில் இன்ஜின் வருவதைக் கண்ட மக்கள் ஆச்சரியத்துடன் பார்வையிட்டனர்.

# ஜெய்சங்கரின் ஈரான் பயணம்

புதிய ஈரானிய அதிபராக அயதுல்லா சையித் இப்ராகிம் ரைசி பதவி ஏற்பதை முன்னிட்டு, ஆகஸ்ட் 5, 6 ஆகிய தேதிகளில் இரண்டு நாள் பயணமாக பாரத வெளியுறவுத்துறை அமைச்சகர் ஜெய்சங்கர் ஈரானுக்கு சென்றுள்ளார். முன்னதாக, மாஸ்கோ செல்லும் வழியில் கடந்த ஜூலை 7ல் ஜெய்சங்கர் டெஹ்ரானுக்குப் திடீர் விஜயமாக ஈரான் சென்று பாரதம் ஈரானுக்கு இடையேயான தூதரக உறவுகள் குறித்து பேச இப்ராகிம் ரைசியை சந்தித்தார் என்பது குறிப்பிட்தக்கது. ஒருபுறம் அமெரிக்கா ஈரான் மீது கடுமையான பொருளாதாரத் தடைகள் விதித்துள்ளது. மறுபுறம் தற்போது, ஆப்கனில் தற்போது போர் நடைபெற்று வருகிறது. இந்த சூழலில், தலிபான்களிடம் செல்வாக்குப் பெற்ற ஈரானை நமது மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சந்திப்பது உலக அரங்கில் உற்று நோக்கப்படுகிறது.

விஜயபாரதம்



# வலையில் சிக்கிய மீம்கள்










## விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க

**www.vijayabharatham.org**


என்ற இணையதளம் அல்லது

**044 - 26420870** என்ற தொலைபேசி

எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006

# இன்று ஹிரோஷிமா நினைவு தினம்



விஜயபாரதம்

இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பான் தலைநகர் ஹிரோஷிமா மீது 1945, ஆகஸ்ட் 6ம் தேதி, அமெரிக்கா அணுகுண்டு வீசி தாக்கியதன் 73வது நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. உயிரிழந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், அணு ஆயுதத்தின் பேரழிவை உலகுக்கு உணர்த்தும் நாளாகவும், இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் பியர்ல் ஹார்பர் கடற்படை தளத்தின் மீது ஜப்பான் 1941, டிசம்பர் 7ல், அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தியது. இதனால் இரண்டாம் உலகப் போரில் இறங்க வேண்டிய கட்டாயத்திற்கு அமெரிக்கா தள்ளப்பட்டது. ஜப்பானுக்கு மறக்கமுடியாத திலடி தர தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, 1945 ஆகஸ்ட் 6ம் தேதி, ஜப்பான் நேரப்படி காலை 8:16 மணிக்கு பி29 ரக எனோலாகெய் விமானம் மூலம் ஹிரோஷிமா நகரில் 'லிட்டில்பாய்' எனும் 60 கிலோ எடையுள்ள உலகின் முதல் அணுகுண்டு வீசப்பட்டது. இது அப்பகுதியில் 4 சதுர மைல் சுற்றளவுக்கு அழிவை ஏற்படுத்தியது.

அந்த நகரில் இருந்த 90 ஆயிரம் கட்டடங்களில் 28 ஆயிரம் கட்டடங்கள் மட்டுமே தப்பின. ஹிரோஷிமாவின் மொத்த மக்கள்தொகை 3.50 லட்சம். இதில் 1.40 லட்சம் பேர் பலியாகினர். கதிர்வீச்சால் ஆயிரக்கணக்கானோர் நோய்வாய்ப்பட்டனர். அதன் பாதிப்புகள் இன்றும் தொடர்கிறது. குண்டு வீசப்பட்டு 16 மணி நேரம் கழித்து, அன்றைய அமெரிக்க அதிபர் ஹாரிட்ரூமேன் இதனை அறிவித்தார். அதன் பிறகே ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீசப்பட்டது உலக நாடுகளுக்கு தெரியவந்தது.

மூன்று நாட்கள் கழித்து ஆகஸ்ட் 9ல் ஜப்பானின் நாகசாகி நகரின் மீது 'பேட்மேன்' என்ற 2வது அணுகுண்டை அமெரிக்கா வீசியது. இத்தாக்குதல்களால், இரண்டு நகரங்களும் நிலைகுலைந்தன. கதிர்வீச்சு காரணமாக பலியானவர்களின் எண்ணிக்கை, 2.30 லட்சமாக உயர்ந்தது. 6 நாட்கள் கழித்து 1945 ஆகஸ்ட் 15ல் ஜப்பான் சரணடைவதாக ஒப்புக்கொண்டது.

அத்துடன் இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தது. அணுகுண்டு தாக்குதலால் பாதிக்கப்பட்ட இந்த நகரங்கள், அந்த சுவடே தெரியாத அளவுக்கு தற்போது பல்வேறு துறைகளில் வளர்ச்சிஅடைந்தது அந்நாட்டின் தன்னம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.